## சுருக்கம்

முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது – தேர்வுக்குழுவில் மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### உயர்கல்வித் (ஏ2) துறை

அரசாணை (நிலை) எண்.145 — நாள் 12.08.2024

குரோதி வருடம், ஆடி – 27

திருவள்ளுவர் ஆண்டு – 2055

படிக்க:-

அரசாணை (நிலை) எண்.225, உயர்கல்வித் (ஏ1) துறை, நாள். 03.08.2015.

---

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், விஞ்ஞான வளர்ச்சி, மனிதவியல் மற்றும் மாணவர்கள் நலன் ஆகியவற்றிற்கு பாடுபட்டு வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் எனவும், தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு 8 கிராம் தங்கத்தாலான பதக்கம், ரூ.5.00 இலட்சம் ரொக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படும் எனவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலும், அவ்வரசாணையில், இவ்விருதுக்காக கீழ்காணும் அலுவலர்களைக் கொண்ட தேர்வுக்குழு அமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| குழுத்தலைவர் | – | தலைமைச் செயலாளர் |
| உறுப்பினர்கள் | – | 1. முதன்மைச் செயலர், நிதித்துறை |
| | | 2. முதன்மைச் செயலர், பொதுத்துறை |
| | | 3. முதன்மைச் செயலர், பள்ளிக்கல்வித் துறை |
| உறுப்பினர் செயலர் | – | செயலாளர், உயர்கல்வித் துறை |

(த.பி.பா.)

3. மேலும், தேர்வுக்குழுவின் உறுப்பினர் செயலர் அவர்களால், விஞ்ஞான வளர்ச்சி, மனிதவியல் மற்றும் மாணாக்கர் நலன் ஆகிய துறைகளில் பெரும் பங்காற்றிய நபர்களின் விவரங்கள் பெறப்பட்டு, தேர்வுக்குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட வேண்டும். அவற்றிலிருந்து ஒரு நபரை, தேர்வுக்குழு, இவ்விருதுக்காக பரிந்துரை செய்யும் எனவும், அதனடிப்படையில், அரசின் ஆணையை பெற்ற பின்பு, தேர்ந்தெடுக்கப்பட்டவரின் பெயர், பதக்கம், ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றினை, சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விருதாளருக்கு வழங்கிடும் வகையில், தேர்வுக்குழுவின் உறுப்பினர் செயலர் அவர்களால் பொதுத் (பொது-I) துறைக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும், அவ்வரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற 2024-ஆம் ஆண்டிற்கான டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருதுக்கான தேர்வுக்குழு கூட்டத்தில், இவ்விருது பெற்ற முன்னாள் விருதாளர்கள் இருவரை, இவ்விருதுக்கான தேர்வுக்குழுவில் உறுப்பினர்களாக சேர்க்கலாம் என முடிவு மேற்கொள்ளப்பட்டது.

5. மேற்காணும், தேர்வுக்குழுவின் பரிந்துரையினை அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, மேலே படிக்கப்பட்ட அரசாணையில் அமைக்கப்பட்ட, டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருதுக்கான தேர்வுக்குழுவினை கீழ்கண்டவாறு மாற்றி அமைத்து அரசு ஆணையிடுகிறது :-

| | | |
|---|---|---|
| குழுத்தலைவர் | – | அரசு தலைமைச் செயலாளர். |
| உறுப்பினர்கள் | – | 1. அரசு செயலாளர் / அரசு முதன்மைச் செயலாளர் / அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை. |
| | | 2. அரசு செயலாளர் / அரசு முதன்மைச் செயலாளர் / அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பொதுத்துறை. |
| | | 3. அரசு செயலாளர் / அரசு முதன்மைச் செயலாளர் / அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை. |
| | | 4. டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது பெற்ற முன்னாள் விருதாளர்கள் இருவர். |
| உறுப்பினர் செயலர் | – | அரசு செயலாளர் / அரசு முதன்மைச் செயலாளர் / அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உயர்கல்வித் துறை. |

(...3)

மேலும், ஒவ்வொரு ஆண்டும், டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருதுக்கான தேர்வுக்குழு கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு, இவ்விருது பெற்ற முன்னாள் விருதாளர்களில் இருவரை, அந்தாண்டுக்கான தேர்வுக்குழு உறுப்பினர்களாக இத்தேர்வுக்குழுவின் தலைவர் அவர்களால் தேர்வு செய்யப்படுவார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து துறை அரசு செயலாளர்கள் / அரசு முதன்மை செயலாளர்கள் / அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், சென்னை – 600 009.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 600 009.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
தேசிய தகவல் மையம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12.08.2024
பிரிவு அலுவலர்.